# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அம்பாசமுத்திரம்
# திருநெல்வேலி மாவட்டம்

**முன்னிலை : திரு.ப.பிரவீன் ஜீவா, பி.ஏ.,பி.எல்.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
(முழு கூடுதல் பொறுப்பு)
அம்பாசமுத்திரம்.

2025 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதம், 28–ம் நாள், செவ்வாய்க்கிழமை

**ஐ.ஏ.எண். 2/2025–இன்**

**அ.வ.எண். 10/2025**

(CNR.No.TNTL0D-000017-2025)

திரு. வேலு ... மனுதாரர் / வாதி

/ எதிர் /

1. திருமதி. புஷ்பம்
2. திரு. அமல்ராஜ்
3. திரு. செல்வம் ... எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பு 07.10.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.விஜய் பால் பிராங்ளின் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சண்முகநாதன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டறிந்தும், வழக்கு ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## உத்தரவு

மனுதாரர்/வாதி தரப்பில் உ.வி.ந.மு.ச. கட்டளை 6 விதி 17–ன் கீழ் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :–**

அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தைப் பொறுத்து எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரப்பட்டுள்ளது என்றும், எதிர்வழக்குரையில், மனுதாரர்/வாதிக்கு பாத்தியப்பட்ட தபசில் சொத்திற்குரிய மனுதாரர்/வாதி பெயரிலுள்ள பட்டாவானது சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்டது என்றும், தபசில் சொத்திற்கான அனுபவமும் நாளது தேதி வரை மனுதாரர்/வாதி வசமே இருந்து வருகிறது. ஆனாலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள், மனுதாரர்/வாதிக்குப் பாத்தியப்பட்ட தபசில் சொத்தினை அபகரிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார்கள். இந்நிலையில், மனுதாரர்/வாதிக்கு தனித்துப் பாத்தியப்பட்ட தபசில் சொத்தில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு உரிமை இருப்பதாக பிரஸ்தாபித்து வருவதால், அசல் வழக்கில் மனுதாரர்/வாதி கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளைப் பரிகாரத்தைத் தொடர்ந்து தபசில் சொத்தானது மனுதாரர்/வாதிக்கு மட்டுமே தனித்து பாத்தியப்பட்டது என விளம்புகை பரிகாரம் கோர வேண்டியுள்ளது அவசியமானதாக உள்ளது. மேலும், பிராதினை மேற்குறிப்பிட்டவாறு சீர்திருத்தம் செய்வதால் வழக்கின் தன்மையோ, அல்லது வழக்குமூலமோ மாறப்போவதில்லை, மேலும், எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எவ்வித கஷ்ட நஷ்டங்களும் ஏற்படப்போவதில்லை. ஆகவே, இம்மனு சீர்திருத்த வேண்டிய விபரத்தில் கண்டுள்ளபடி பிராதினை சீர்திருத்தம் செய்ய வேண்டியது நீதியின் பொருட்டும், நியாயத்தின் பொருட்டும் அவசியமானது. எனவே, இம்மனுவானது அனுமதிக்கப்பட வேண்டும்.

**3. எதிருரையின் சுருக்கம் :–**

மனுதாரர்/வாதியின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் கோரியுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானதல்ல. உண்மையில், பிராது தபசில் சொத்திற்கு மனுதாரர்/வாதி பெயரில் எவ்வித தனித்த முறையான ஆவணமும் கிடையாது. பிராது தபசில் சொத்து வேலு குடும்பனுக்கு பாத்தியப்பட்டு, பின்னர், மேற்படியார் அவரது மனைவி சீதையம்மாளுக்கு கடந்த 1938ம் ஆண்டு அம்பாசமுத்திரம் சார்பதிவக ஆவண எண்.622/1938ன் மூலம் உயில் எழுதி

வைத்திருந்த நிலையில், மேற்படி இருவரும் காலஞ்சென்றுவிட்டார்கள். அதன்பின்னர், பிராது தபசில் சொத்தில் நாளதுவரை எவ்வித ஆவணமும் வாதி பெயருக்கு தனித்து பாத்தியப்படவில்லை. மேலும், வாதி போலியாக ஏற்படுத்திக் கொண்ட தபசில் சொத்திற்கான பட்டாவும் சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்டுள்ளதால், எவ்வித தனித்து பாத்தியப்பட்ட ஆவணமும் இன்றி மனுதாரர்/வாதி பிராது தபசில் சொத்து தனித்துப் பாத்தியப்பட்ட சொத்து என விளம்புகை பரிகாரம் கோர முடியாது. மேலும், மனுவில் அரசு தரப்பை கட்சி சேர்க்காமல் சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்ட பட்டாவை செல்லாது என விளம்புகை பரிகாரம் கோருவது, அரசு தரப்பை கட்சி சேர்க்கப்படவில்லை என்ற தோஷத்தால் மனு ரத்து செய்யப்பட வேண்டும். மேலும், மேற்படி பட்டா சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி உத்தரவின் மீது வருவாய் நீதிமன்றத்தில் தான் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும். மாறாக, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ரத்து செய்த உத்தரவினை செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்பது தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம், 1983-க்கு எதிரானது. எனவே, மனுவானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு சீர்திருத்த விபரத்தில் கண்டுள்ளபடி அசல் வழக்கின் பிராதினை சீர்திருத்தம் செய்ய மனுதாரர்/வாதிக்கு அனுமதியளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதே ஆகும்.

**<u>தீர்வு</u> :-**

**5.** இம்மனுவில் மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித சாட்சியமோ, சான்றாவணமோ முன்னிடப்படவில்லை. மனு உறுதிக்கூற்று மற்றும் எதிருரையில் சொல்லியுள்ள சங்கதிகளையொட்டியே மனுதாரர்/வாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் வாதிட்டனர்.

**6.** இந்நிலையில், இந்நீதிமன்றமானது அசல் வழக்கு ஆவணங்களைப் பார்வையிடும்போது, அசல் வழக்கானது பிராது தபசில் சொத்தினைப் பொறுத்து நிரந்தர

உறுத்துக்கட்டளைப் பரிகாரம் கோரி எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக மனுதாரர்/வாதியால் தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு, அதனடிப்படையில் எழுவினாக்கள் வனையப்பட்டு, விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வரும் நிலையில், இந்த இடைக்கால மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது.

**7.** வழக்கு ஆவணங்களைப் பரிசீலனை செய்து பார்க்கும்போது, பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வாதியின் உரிமை மற்றும் அனுபவத்தை மறுத்துள்ளதால், வாதி தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்து விளம்புகை பரிகாரம் கோரி இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**8.** எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், பிராது தபசில் சொத்து வேலு குடும்பனுக்கு பாத்தியப்பட்டு, பின்னர், மேற்படியார் அவரது மனைவி சீதையம்மாளுக்கு கடந்த 1938 ம் ஆண்டு அம்பாசமுத்திரம் சார்பதிவக ஆவண எண்.622/1938 ன் மூலம் உயில் எழுதி வைத்திருந்த நிலையில், மேற்படி இருவரும் காலஞ்சென்றுவிட்டார்கள் மேலும், வாதி போலியாக ஏற்படுத்திக் கொண்ட தபசில் சொத்திற்கான பட்டாவும் சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்டடுள்ளது என்றும், மேற்படி பட்டா சேரன்மகாதேவி சார் ஆட்சியரால் ரத்து செய்யப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ள நிலையில், மேற்படி உத்தரவின் மீது வருவாய் நீதிமன்றத்தில் தான் மேல்முறையீடு செய்திருக்க வேண்டும் என்றும், மாறாக, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் ரத்து செய்த உத்தரவினை செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்பது தமிழ்நாடு பட்டா பாஸ்புக் சட்டம், 1983–க்கு எதிரானது என்றும், எனவே, மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிர்மனுதாரர் தரப்பில் கடுமையாக ஆட்பேசனை செய்யப்பட்டாலும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கூறப்பட்டுள்ள மேற்படி சங்கதிகள் குறித்து அசல் வழக்கில்தான் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் தீர்மானிக்க வேண்டுமேயொழிய இந்த மனுவில் தீர்மானிக்க இயலாது.

**9.** எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாதி உரிமை மற்றும் அனுபவத்தை பிரதிவாதிகள் தரப்பில் மறுத்துள்ளதாலும், வாதி தரப்பில் அவர் வழக்கை நிரூபிப்பதற்கு விளம்புகை

பரிகாரம் கோருவது அவசியம் என்பதாலும், இந்த சீர்திருத்த மனுவானது எவ்வித காலதாமதமுமின்றி வழக்கு விசாரணை துவங்குவதற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாலும், இந்த மனுவினை அனுமதிக்குட்பட்சத்தில், எதிர்மனுதாரர்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப்போவதில்லை என்ற காரணத்தினாலும், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே தாவா சொத்துக்களைப் பொறுத்து உரிமை பிரச்சனை சம்பந்தமாகவும், மற்றும் பட்டா ரத்து செய்யப்பட்டது சம்பந்தமாகவும் பிரச்சனை இருந்து வருவதால், அசல் வழக்கின் பிராதில் சீர்திருத்தம் செய்தால்தான் அசல் வழக்கில் இறுதியானதொரு முடிவை பிறப்பிக்க முடியும் என்பதாலும், மேலும், மனுவில் கூறியுள்ள சீர்திருத்தங்களை மேற்கொள்ள இம்மனுவினை அனுமதிக்காத பட்சத்தில், மீண்டும் வேறொரு புதிய வழக்கினைத் தாக்கல் செய்ய வாய்ப்புள்ளதாலும், எனவே, மனுவில் சொல்லியுள்ள சீர்திருத்தங்களை அனுமதிக்க வேண்டியது அவசியமாகிறது. அந்த வகையில், மேற்படி சீர்திருத்தத்தினால் அசல் வழக்கின் தன்மை மாறுபடப்போவதில்லை என்பதாலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மனுவின் தன்மை கருதி அவரவர் செலவுதொகையை அவரவர்களே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

**இறுதியாக, இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுதொகை இல்லை.**

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P PRAVEEN JEEVA

Uploaded on 28.10.2025
Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2025.10.28 18:22:55 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.

**<u>மனுதாரர்/வாதி  தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u>** :–

இல்லை

**<u>எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்  தரப்பு சாட்சிகள்  மற்றும் சான்றாவணங்கள்</u>** :–

இல்லை

P PRAVEEN JEEVA

Uploaded on 28.10.2025
Digitally signed by P PRAVEEN JEEVA
Date: 2025.10.28 18:23:03 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, (மு.கூ.பொ.)
அம்பாசமுத்திரம்.